**நாள் 18.06.2025** **STC 96/2020** **அ.சா .1**

**பெயர் லோகநாதன்**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**எதிரி தரப்பில்** 311 Crpc **ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி**

(1) 19.11.2018ம் தேதி கணியூர் மெயின் ரோட்டில் பேருந்து நிலையம் அருகில் காலை 11.30 மணியளவில் வழக்கு சம்மந்தமாக ஆய்வு செய்தேன். புகாரில் பேருந்து நிலையம் அருகில் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாகனங்களை நிறுத்தி சோதனை செய்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். சுமார் 5–6 வாகனங்களை நிறுத்தி சோதனை செய்தேன். எதிரி வாகனத்தில் டீ தூள் வைத்திருந்தார் வேறு உணவு பொருட்கள் இல்லை. எதிரி கலப்படத் டீ தூள் விற்பனை செய்வதாக எங்களுக்கு ரகசிய தகவல் வந்ததால் நாங்கள் ஆய்வு செய்தோம்.

(2) ஆய்வு செய்வதற்கு என்னுடன் நியமன அலுவலர் மற்றும் இரண்டு உணவு பாதுகாப்பு அலுவலர்கள் வந்தார்கள். அவர்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் நியமன அலுவலர் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் மற்றவர்களை சேர்க்கவில்லை. எத்தனை கிலோ டீ தூள் கைப்பற்றப்பட்டது என்று சரியாக ஞாபகம் இல்லை. ஆய்வு செய்து உணவு பொருள் மாதிரி எடுத்து அதற்கு ரசீது பெற்று பேக் செய்து மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கிய நடைமுறைகள் சுமார் 2 மணி நேரம் முதல் 3 மணி நேரம் வரை ஆனது. அந்த சமயத்தில் கூட்டமாக இருந்தது என்றால் அவ்வளவு கூட்டம் இல்லை. சுமார் 10–15 நபர்கள் இருந்தார்கள். சாட்சியாக கையெழுத்து பெற்றுள்ளவரின் தந்தை பெயர் மற்றும் முகவரி பெறவில்லை என்றால் முகவரி பதிவு செய்யப்பட்டுள்ளது தந்தை பெயர் இல்லை. சாட்சியின் முகவரி பெறவில்லை என்றால் சரிதான்.

(3) வழக்கு சம்மந்தமான ஆய்வுக்கு பின்பு அன்றைய தினம் வேறு கடைகளில் ஆய்வு செய்ய நேரமில்லை அதனால் ஆய்வு செய்யவில்லை. எதிரி எந்த வாகனத்தில் உணவு பொருட்களை வைத்திருந்தார் என்றால் Eicher வாகனத்தில் வைத்திருந்தார்.

வாகனத்தின் பெயரை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி பொள்ளாச்சியில் எண்ணெய் மற்றும் மளிகை கடை வைத்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எதிரி சக்தி டீ தூள் உரிமத்துடன் தான் விற்பனை செய்து வந்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் கடை விஜய் அசோசியேட்ஸ் உணவு பாதுகாப்பு துறையில் உரிமம் பெற்றுள்ளார். எதிரி டீ தூள் சில்லரை விற்பனை செய்ய அவசியமில்லை என்றால் சரியல்ல. பொள்ளாச்சியில் இருந்து வியாபார போட்டியில் அவர் மீது புகார் கொடுக்க அவரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வரச்சொல்லி புகாரை பதிவு செய்தோம் என்றால் சரியல்ல.

(4) இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள விவரங்கள் என்னால் பூர்த்தி செய்யப்பட்டு எதிரியிடம் கையொப்பம் மட்டும் பெறப்பட்டது என்றால் சரியல்ல எதிரியால் பூர்த்தி செய்யப்பட்டது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் நான் தான் பூர்த்தி செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கில் ரசீதில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாக்கல் செய்யப்பட்டுள்ள ரசீது எதிரியின் ரசீது அல்ல என்றால் சரிதான். வழக்கில் தாக்கல் செய்துள்ள மகஜர் சட்ட விதிகளுக்கு உட்பட்டு தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல எதிரியால் எழுதி கொடுக்கப்பட்டது. மகஜர் மனு நான் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். மகஜர் மனுவில் 2 கிலோ டீ தூள் உணவு மாதிரிக்கு பெற்றுக்கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். 5A படிவத்தில் ஒரு கிலோ மாதிரிக்கு எடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அதில் சாட்சி கையெழுத்து மட்டும் தான் போட்டுள்ளார் என்றும் அதில் முகவரி இல்லை என்றால் சரிதான்.

(5) 19.11.2018 தேதியிட்ட கடிதத்தில் உணவு மாதிரி உணவுப் பொருள் விற்பனை கடையில் எடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு ஆவண எண்.9 ல் உள்ள முதல் ரசீது மதுரைக்கு பகுப்பாய்வுக்கு 09.09.2011 ல் அனுப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 19.11.2018 ம் தேதி தான் அனுப்பப்பட்டது. அதில் எவ்வளவு அளவு அனுப்பப்பட்டது என்று இல்லை என்றால் சரிதான். தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு ரசீதுகளும் வேறு வழக்கு சம்மந்தப்பட்டது என்றால் சரியல்ல. Form B Analysis report ல் 50 கிராம் அளவுள்ள 20 பொட்டலங்கள் பெறப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது

என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பொருட்கள் சுமார் 10 மாதங்கள் கழித்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கில் 19.11.2018 ம் தேதி உணவு மாதிரிகள் 1 கிலோ அளவில் 4 எடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல 4 கால் கிலோ அளவில் மட்டும் ஒரு கிலோவிற்கு எடுக்கப்பட்டது. உணவு மாதிரிகளை 800 ரூபாய்க்கு வாங்கி உள்ளேன் என்றால் சரிதான்.

(6) பொதுவாக டீ தூளின் காலாவதி காலம் 6 மாதம் என்றால் சரியல்ல. ஒரு வருடம் வரை நன்றாக இருக்கும். டீ தூளின் காலாவதி காலம் 6 மாதம் தான் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காலாவதியான பின்பு பகுப்பாய்வு செய்யப்பட்டதால் தான் உணவு பொருளின் தன்மை மாறிவிட்டது என்றால் சரியல்ல. ஆய்வு அறிக்கையில் தர நிர்ணயம் அனைத்தும் சரியாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொதுவாக உணவு பொருட்கள் நீண்ட காலம் சேமித்து வைக்கப்பட்டால் அதன் தன்மை மாறும் என்றால் உணவு பொருளை பொறுத்து அது மாறுபடும். எதிரி கணியூர் வர வேண்டிய அவசியமில்லை என்றும் புள்ளி விவர கணக்கிற்காக கணியூரில் வைத்து உணவு பொருள் மாதிரி எடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்